தரம் 10

முதலாந் தவணைப் பரீட்சை ~ 2018

புவியியல் - I , II

சுட்டெண் : | | | | | |

நேரம் : 3 மணித்தியாலம்

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- 01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்ளேயிருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. புவியின் அமைப்பில் மெல்லியதான படை ..... ஆகும்.
(ஓடு / மூடி / கோளவகம்)

02. புவியின் வளிமண்டலத்தில் மிக உயர்வாகக் காணப்படும் படையின் பெயர் .....
(மாறன் மண்டலம் / இடை மண்டலம் / வெப்ப மண்டலம்)

03. ஒளித்தொகுப்பு என்னும் தோற்றப்பாடு ..... என்பதற்குரியது.
(உயிர்க்கோளம் / வளிமண்டலம் / கற்கோளம்)

04. புவி ஓடானது மூடியிலிருந்து ..... தொடர்ச்சியின்மையினால் பிரிக்கப்படுகின்றது.
(கூற்றன்பேர்க் / மோகோறோவிசிக் / லேமன்)

05. கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயர்வான இடத்தில் அமைந்துள்ள ஏரியாக ..... கருதப்படுகின்றது.
(விக்டோரியா / தித்திக்கா / தங்கனீக்கா)

06. வாவியிலிருந்து ஆரம்பிக்கும் ஆறொன்றிற்கு ..... உதாரணமாகும்.
(அமேசன் / நைல் / மரேடாலிங்)

07. தென் அமெரிக்காக் கண்டத்தில் அமைந்துள்ள பிரதான மலைத்தொடர் ..... ஆகும்.
(றொக்கி மலைத்தொடர் / அந்தீஸ் மலைத்தொடர் / யூரல் மலைத்தொடர்)

08. உலகின் மிகப்பெரிய தீவு ..... ஆகும்.
(கிறீன்லாந்து / ஐஸ்லாந்து / மடகஸ்கார்)

09. கண்டநகர்வுக் கோட்பாடு ..... என்பவரால் முன்வைக்கப்பட்டது.
(அல்பிரட் வெகனர் / லூதியன் கிறீன் / ஆரர் ஹோம்ஸ்)

10. உலகின் காலநிலைப் பரம்பல் பற்றிய கருத்தினை முதன்முதலில் வெளியிட்டவர் ..... ஆவார்.
(ஒஸ்ரின் மில்லர் / தோண்வைற் / கெப்பன்)

Scanned by CamScanner

◆ **11 தொடக்கம் 15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வான்றையும் வாசித்து சரியாயின் "ச" ஐயும் பிழையாயின் "பி" ஐயும் தெரிவு வட்டமிடுக.**

11. வருடம் முழுவதும் நீண்டதாகக் காணப்படும் கடும் குளிர்ப் பருவம் அயனக்காலநிலை வலயத்தின் ஒரு தனித்துவமான அம்சமாகும். (ச / பி)

12. கருங்கடல் முற்றாக நிலத்தினால் சூழப்பட்டுள்ள கடலாகும். (ச / பி)

13. சாதாரண வெப்பநிலை நழுவுவீத செயற்பாடு இடம்பெறுவது மாறன் மண்டலத்திலாகும். (ச / பி)

14. உயிர்க்கோளத்தின் சமநிலை தகர்வுறுவதில் மனிதச் செயற்பாடுகள் கூடுதலாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. (ச / பி)

15. "தாரிம் வடிநிலம்" ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது. (ச / பி)

◆ **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்களில் 'அ' மற்றும் 'ஆ' என இரு நிரல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிரலில் உள்ளவற்றை அவற்றின் தொடர்புகளின் அடிப்படையில் பொருத்தும்போது கிடைக்கும் சரியான விடையினது இலக்கத்தினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16. உலகின் பிரதான மலைத்தொடர்கள் சில 'அ' நிரலிலும் அவை அமைந்துள்ள கண்டங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும்பொழுது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

'அ'	'ஆ'
1. அல்தாய்	A - ஆபிரிக்கா
2. அல்ப்ஸ்	B - ஆசியா
3. அப்பலாச்சியன்	C - ஐரோப்பா
	D - வடஅமெரிக்கா

1. B, C, D 2. A, B, C 3. D, C, B 4. A, B, D

(.....)

17. புவியினது வளிமண்டலத்தின் பிரதான படைகள் சில 'அ' நிரலிலும் வளிமண்டலப் படைகளின் மேலெல்லையின் உயரங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும்பொழுது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

'அ'	'ஆ'
1. மாறன் மண்டலம்	A - 50km
2. இடை மண்டலம்	B - 20km
3. படை மண்டலம்	C - 120km
	D - 80km

1. A, C, B 2. B, D, A 3. C, D, A 4. A, D, C

(.....)

18. கண்டங்களுக்கு நெருக்கமாகக் கண்டமேடைகளில் அமைவுபெற்றுள்ள தீவுகள் 'அ' நிரலிலும் அத்தீவுகளுக்கான உதாரணங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும்பொழுது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

'அ'	'ஆ'
1. ஆசியாக்கண்ட மேடையில் அமைந்துள்ள தீவு	A - மடகஸ்கார்
2. அவுஸ்திரேலியாக் கண்டமேடைக்குள் அமைந்துள்ள தீவு	B - ஐஸ்லாந்து
3. ஆபிரிக்காக் கண்டமேடைக்குள் அமைந்துள்ள தீவு	C - பப்புவா நியூகினியா
	D - ஜாவா

1. A. B, C 2. B, C, D 3. A, B, D 4. D, C, A (.....

Scanned by CamScanner

19. புவியில் பல்வேறு வடிவங்களில் காணப்படும் நீரின் பரம்பல் சில 'அ' நிரலிலும் அந்நீரின் சதவீதம் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும்பொழுது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

'அ'	'ஆ'
1. உவர்நீர்	A - 52%
2. நன்னீர்	B - 38%
3. மண்ணீர்	C - 2.5%
	D - 97.5%

1. A, B, C 2. A, B, D 3. D, C, B 4. B, C, A

(.....)

20. உலகில் காணப்படும் மேட்டுநிலங்கள் சில 'அ' நிரலிலும் அம்மேட்டுநிலங்கள் காணப்படும் கண்டங்கள் 'ஆ' நிரலிலும் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள ஒழுங்குடன் 'ஆ' நிரலைப் பொருத்திப் பார்க்கும்பொழுது கிடைக்கும் சரியான விடையினைத் தெரிவு செய்க.

'அ'	'ஆ'
1. திபெத் மேட்டுநிலம்	A - தென்அமெரிக்காக்கண்டம்
2. பி மேட்டுநிலம்	B - ஆசியாக் கண்டம்
3. பிறேசிலியன் மேட்டுநிலம்	C - ஆபிரிக்காக் கண்டம்
	D - அவுஸ்திரேலியாக் கண்டம்

1. B, C, A 2. A, B, C 3. B, C, D 4. D, B, A

(.....)

◆ **21 தொடக்கம் 27 வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.**

21. உலகின் பாரிய சமவெளிகளில் ஒன்றான நுல்லாபோ (Nullarbor) சமவெளி ..... என்னும் கண்டத்தில் அமைந்துள்ளது.

22. செங்கடலும் மத்திய தரைக் கடலும் ..... என்ற கால்வாய் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

23. சமுத்திரத்தின் மிக ஆழமான இடமாகக் கருதப்படும் 'மரியானா அகழி' ..... சமுத்திரத்தில் அமைந்துள்ளது.


24. வொல்கா நதி பாய்ந்து சென்று ..... கடலில் கலக்கிறது.

25. உயர் நிலங்களினால் பகுதியாகவோ முழுவதுமாகவோ சூழ்ந்து காணப்படும் தாழ் நிலப்பிரதேசம் ..... என அழைக்கப்படும்.

26. இடைமண்டலத்தின் மேல் எல்லை ..... என அழைக்கப்படும்.

27. கற்கோளமானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக மிகவும் மெதுவாக நகர்ந்து செல்லும் ..... புவி ஓட்டுத் தகடுகளைக் கொண்டுள்ளது.

◆ **28 முதல் 30 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைப் பயன்படுத்துக.**



28. கொட்டியாரக்குடாவினை ..... எனும் எழுத்து காட்டுகின்றது.

29. ஆனையிறவு அமைந்துள்ள மாவட்டத்தினை ..... எனும் எழுத்து காட்டுகின்றது.

30. பாசிக்குடா கடற்கரை அமைந்துள்ள மாவட்டத்தினை ..... எனும் எழுத்து காட்டுகின்றது.

Scanned by CamScanner

◆ 31 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

31. வான்வெளியிலிருந்து புவிக்கு வரும் பெரும்பாலான ஆகாயக்கற்கள் எரிந்து அழிந்து விடுவது,
1. மாறன் மண்டலத்திலாகும்.
2. படை மண்டலத்திலாகும்.
3. வெப்ப மண்டலத்திலாகும்.
4. இடை மண்டலத்திலாகும்.

(.....)

32. கண்ட ஓடு கொண்டிருப்பது,
1. சிலிக்கேற்றுக்கள்
2. எரிமலைக் குழம்புப்பாறைகள்
3. கருங்கற்பாறைகள்
4. மக்னீசியம்

33. பின்வரும் கூற்றுக்களுள் உயிர்க்கோளம் பற்றிய பிழையான கூற்றினைத் தெரிவுசெய்க.
1. உயிர்க்கோளம் என்பது முழு உயிரினச் சூழலையும் குறிப்பதுடன் எல்லாக் காலங்களிலும் இடைவிடாது தொழிற்படுகின்றது.
2. ஒளித்தொகுப்புச் செயன்முறையானது உயிர்க்கோளத்திற்குள். இடம்பெறுகின்றது.
3. உயிர்க்கோளத்தில் தாவரம் மற்றும் விலங்கின வாழ்வுக்கிடையில் ஓர் இடைத்தொடர்பு காணப்படுகின்றது.
4. கற்கோளத்தினையும், நீர்க்கோளத்தின் பகுதிகளையும் மொத்தமாக உயிர்க்கோளம் கொண்டிருக்கின்றது.

34. உலகில் கடல்மட்டத்திலிருந்து மிக உயரத்தில் அமைந்துள்ள மேட்டு நிலமாவது,
1. தக்கண மேட்டு நிலம்
2. பமீர் மேட்டு நிலம்
3. டெகான் மேட்டு நிலம்
4. அராபிய மேட்டு நிலம்

35. பின்வரும் வளிமண்டலப் படைகளுள் எது வானொலி அலைகளை ஒலிபரப்புவதற்கு உதவுகின்றது?
1. மாற்ன் மண்டலம் 2. படை மண்டலம் 3. வெப்ப மண்டலம் 4. இடை மண்டலம்

36. மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர்நிலங்களுக்கு வழங்கப்படும் பெயர் யாது?
1. மலைத்தொடர் 2. மேட்டு நிலங்கள் 3. சமவெளிகள் 4. ஆறுகள்

37. உயிர்க்கோளத்தில் உயிரற்ற காரணிகளில் ஒன்று,
1. தாவரங்கள் 2. விலங்குகள் 3. பிரிகையாக்கிகள் 4. சூரிய ஒளி

38. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் 'நீலக்கோள்' என்னும் பெயர் வழங்கப்பட்டுள்ள கோள்,
1. புதன் 2. வியாழன் 3. புவி 4. வெள்ளி

39. அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ள கடல்,
1. கரிபியன் கடல் 2. வட கடல் 3. யப்பான் கடல் 4. ஏரல் கடல்

40. $23\frac{1}{2}^0$ வட அகலாங்குக் கோடு என அழைக்கப்படுவது,
1. கடகக் கோடு 2. மத்தியகோடு 3. மகரக்கோடு 4. கிறீன்வீச்கோடு

(40புள்ளிகள்)

Scanned by CamScanner

தரம் 10

முதலாந் தவணைப் பரீட்சை ~ 2018


புவியியல் - II 908

முக்கியம் :

- இவ்வினாத்தாள் I, II என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி - I இன் வினா (வினா இல - 1) கட்டாயமானது. அதில் (அ), (ஆ)ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- பகுதி - II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி - I (கட்டாய வினா)

01) அ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



i. A, B மற்றும் C என்ற எழுத்துக்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ள மூன்று தீவுகளில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைந்துள்ள ஹவாய் தீவினைக் குறித்து நிற்கும் எழுத்து எது? .....

ii. D, E மற்றும் F என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள மலைத் தொடர்களுள் அந்தீஸ் மலைத்தொடரினைக் காட்டும் எழுத்து எது? .....

iii. G, H மற்றும் I ஆகிய மூன்று எழுத்துக்களில் தக்கண மேட்டு நிலத்தைக் குறித்துக் காட்டும் எழுத்து எது? .....


iv. K, L மற்றும் M என்ற எழுத்துக்களில் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள மணிலா நகரைக் காட்டும் எழுத்து எது? .....

v. P, Q மற்றும் R என்ற எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள நதிகளில் ஓப் நதியைக் குறித்து நிற்கும் எழுத்து எது? .....

(10புள்ளிகள்)

Scanned by CamScanner

ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



i. A, B மற்றும் C என்ற எழுத்துக்களால் காட்டப்படும் மூன்று தீவுகளில் நெடுந்தீவினைக் குறிக்கும் எழுத்து எது? .....

ii. D, E மற்றும் F ஆகிய மூன்று எழுத்துக்களில் பதுளை மாவட்டத்தினைக் காட்டும் எழுத்து எது? .....

iii. G, H மற்றும் J என்ற எழுத்துக்களில் கற்பிட்டி மீன்பிடித் துறைமுகத்தைக் காட்டும் எழுத்து எது? .....

iv. K, L மற்றும் M எழுத்துக்களில் சங்கமன்கந்த முனையைக் காட்டும் எழுத்து எது?.....


v. P, Q மற்றும் R என்ற எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள மூன்று நகரங்களுள் இரத்தினபுரி நகரினைக் குறிக்கும் எழுத்து எது? .....

(10புள்ளிகள்)

Scanned by CamScanner

பகுதி - II (எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக)

02) புவி அமைப்பின் மூன்று படைகளின் குறுக்குப் பக்கப் பார்வையைக் காட்டும் வரைபடம் இங்கு தரப்பட்டுள்ளது.



i. வரைபடத்தில் முறையே 1, 2 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இரண்டு படைகள் எவை என்பதைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. a) அமைப்பின்படி புவிப் படைகளில் மூடியையும் மையப் பகுதியையும் வேறுபடுத்தும் எல்லையினை இனங்காண்பதற்குப் பயன்படுத்தப்படும் பெயர் என்ன?

b) புவியின் மையப் பகுதியின் விசேடமான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)


iii. வரைபடத்தில் இலக்கம் 1 இனால் காட்டப்படும் வலயத்தினுள் நடைபெறும் சூழற் பிரச்சினைகள் மூன்றினை விளக்குக. (5புள்ளிகள்)

03) i. வளிமண்டல சேர்க்கையின் படி அதில் அதிகளவில் காணப்படும் இரண்டு வாயுக்களைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. மாறன் மண்டலத்தில் காணப்படும் மூன்று சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. வளிமண்டலம் மாசடைவதை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய மூன்று செயற்பாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (5புள்ளிகள்)

04) உலகின் பிரதான காலநிலை வலயங்கள் அருகிலுள்ள வரைபடத்தில் காட்டப்படுகின்றது. அதனை நன்கு பரிசீலித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.



i. வரைபடத்தில் A மற்றும் B எழுத்துக்கள் ஒவ்வொன்றினாலும் காட்டப்படும் காலநிலை வலயங்கள் இரண்டினை முறையே பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. உம்மால் மேலே (i) இல் பெயரிடப்பட்ட காலநிலை வலயங்களுள் ஒன்றினது விசேடமான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. உலகின் மானிட நடவடிக்கைகளைக் காலநிலை எவ்வாறு பாதிக்கிறது என்பதை மூன்று உதாரணங்களுடன் விவரிக்குக. (5புள்ளிகள்)

05) i. பின்வருவனவற்றைப் பெயரிடுக.

அ) ஆசியாவின் ஒரு பிரதான மலைத்தொடர்.

ஆ) வட அமெரிக்காவின் ஒரு பிரதான மலைத்தொடர். (2புள்ளிகள்)

ii. அ) முழுவதும் அல்லது பகுதியாக நிலப்பகுதிகளினால் சூழப்பட்ட அல்லது சமுத்திரங்களுடன் இணைந்து காணப்படும் உவர்நீரைக் கொண்ட நீர்ப் பகுதிகளுக்கு வழங்கப்படும் பெயர் யாது?

ஆ) நிலத்தில் காணப்படும் இறக்கங்களில் நன்னீர் நிறைந்து காணப்படும்போது அதற்கு வழங்கப்படும் பெயர் யாது?

இ) நீரால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பிற்கு வழங்கப்படும் பெயர் யாது? (3புள்ளிகள்)

iii. உலகில் மலைப்பாங்கான பிரதேசங்களோடு தொடர்புடைய மானிட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (5புள்ளிகள்)


Scanned by CamScanner

06) i. உயிர்க்கோளத்தின் தொழிற்பாட்டினைப் பாதிக்கின்ற இரண்டு பிரதான காரணிகளைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. உயிர்க்கோளத்தின் எல்லைகள் எவையென்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. உயிர்க்கோளத்தின் சமநிலையை அழிப்பதற்கு மனிதனால் ஏற்படுத்தப்பட்டுவரும் மோசமான பாதிப்புக்களை இரண்டு உதாரணங்களின் துணையுடன் விளக்குக. (5புள்ளிகள்)

07) நீரியல் வட்டத்தின் பல்வேறு நிலைகளைக் கீழேயுள்ள வரைபடம் காட்டுகின்றது. அதனை ஆராய்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




i. வரைபடத்திற்கு அமைய நீரியல் வட்டத்தின் E மற்றும் P எழுத்துக்களினால் கருதப்படுவது எது? (2புள்ளிகள்)

ii. தற்போது பல்வேறு மனித நடவடிக்கைகளின் தாக்கங்களினால் நீரின் தரம் குறைவடைந்து செல்வதற்கான மூன்று காரணங்களை உதாரணங்களுடன் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. குடிநீர்ப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்காக எடுக்கக்கூடிய மூன்று நடவடிக்கைகளை விளக்குக. (5புள்ளிகள்)

08)



i. மேலே தரப்பட்டுள்ள உலகப்படத்தில் A மற்றும் B எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஆசியாவுக்கு வெளியில் நெற்பயிர்ச்செய்கை நடைபெறும் இரண்டு நாடுகளைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

ii. நெல்லுற்பத்தியை வெற்றிகரமாக மேற்கொள்ள உதவும் சாதகமான பௌதிகக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

iii. தற்காலக் காலநிலை மாற்றங்கள் நெல் உற்பத்தியில் செல்வாக்குச் செலுத்தியுள்ள மூன்று காரணிகளை விளக்குக. (5புள்ளிகள்)

Scanned by CamScanner